# வடக்கனந்தல்தேர்வு நிலை பேரூராட்சி

**கள்ளக்குறிச்சி மாவட்டம்**

**ந.க.எண். அ1/ 515 /2021** **நாள். 08.04.2022**

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கள்ளக்குறிச்சி மாவட்டம், வடக்கனந்தல் பேரூராட்சியில் **15–வது நிதி ஆணைய சுகாதார திட்டம் 2021-2022–**ம் ஆண்டின் கீழ் பின்வரும் வேலையினை செய்வதற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ **22.04.2022 ம் தேதி வெள்ளிக்கிழமை** பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூஇலட்சத்தில்) | டேவணித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி நமூனா தொகை ரூ. | வேலை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | Construction of Block Public Health Unit (BPHU) Building at Kachirayapalayam Govt.Public Health Center under FC XV in Vadakkanandal Town Panchayat (S.F.No. 231/2R) | 50.00 | 50,000/- | 10125/– | 180 நாட்கள் |

### நிபந்தனைகள்

1. மேற்படி ஒப்பந்தப்புள்ளி போடுவதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 11.04.2022–ம் தேதி முதல் கீழ்கண்ட இணைய தளத்தில் இருந்து கட்டணம் இல்லாமல் எடுத்துக் கொள்ளலாம். மேற்படி படிவத்தில் இல்லாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**https://tntenders.gov.in, https://tenders.tn.gov.in**

2. மேற்படி பணிக்கு மட்டும் இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும். ஒரு உறையில் (தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி ) "Technical Bid " என்று குறிப்பிட்டு அந்த உறையில் முன் வைப்புத் தொகைக்கான வங்கி கேட்பு வரைவோலை , சரக்கு மற்றும் சேவை வரி (GST ) குறித்த தீர்வை சான்று, தகுதி மற்றும் இதர தகவல்களை வைத்து முத்திரையிடப்பட வேண்டும். மற்றொரு உறையில் (விலை ஒப்பந்தப்புள்ளி) " Price Bid " என்று குறிப்பிட்டு அதில் நிரப்பப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை வைத்து முத்திரையிடப்பட வேண்டும். பின்பு இரு உறைகளையும் ஒரு பெரிய உறையில் வைத்து முத்திரையிட்டு அதில் ஒப்பந்தப்புள்ளி அளிப்பவரின் முகவரியினை குறிப்பிட்டு அளிக்கப்பட வேண்டும். உள் மற்றும் வெளி உறைகளில் பெறுபவர் முகவரியில் **("செயல் அலுவலர், வடக்கனந்தல் பேரூராட்சி ") `` Executive Officer, Vadakkanandal Town Panchayat``** என்று குறிப்பிட வேண்டும். மேலும் எந்த பணிக்கான ஒப்பந்தப்புள்ளி என்பதை கீழ்கண்டவாறு குறிப்பிட வேண்டும். வெளியுறை முத்திரையிடப்படாமலும் மேற்கண்டவாறு குறிப்பிடப்படாமலும் இருக்கும்பட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி தவறுதலாக மாறிவிடுவதற்கோ அல்லது முன் கூட்டியே திறக்கப்படுவதற்கோ ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கும் அலுவலர் பொறுப்பேற்கமாட்டார்.

3. ஒப்பந்தப்புள்ளிகள் **22.04.2022** அன்று பிற்பகல் 3.00 மணி வரை மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமல் ஒப்பந்தப்புள்ளி அளித்தவருக்கே திருப்பி அனுப்பப்படும். **மேற்குறிப்பிட்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கு குறிப்பிடப்பட்ட இறுதி நாளில் விடுமுறை அறிவிக்கப்படுமாயின் அதற்கடுத்த அலுவலக வேலை நாளில் மேற்குறிப்பிட்ட அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும்.**

4. ஒப்பந்ததாரர்கள் தாங்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மாற்றிடவோ அல்லது திரும்ப பெற்றிடவோ வேண்டுமாயின், ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு குறிப்பிடப்பட்டுள்ள கடைசி நேரத்திற்கு முன்னதாக எழுத்து மூலமாக அறிவிப்பு ஒன்றை வழங்கி ஒப்பந்தப்புள்ளிகளை திரும்ப பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகளை மாற்றி திரும்ப வழங்கும் நேர்வில் உள் மற்றும் வெளி உறைகளில் கூடுதலாக **" Withdrawal/Modification"** என்று குறிப்பிட்டு வழங்கப்பட வேண்டும்.

5. பெறப்பட்ட அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளும் **22.04.2022** அன்று பிற்பகல் 3.30 மணிக்கு வடக்கனந்தல் பேரூராட்சி அலுவலத்தில் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அலுவலராலோ திறக்கப்படும். மேற்குறிப்பிட்ட நாளன்று விடுமுறை அறிவிக்கப்படுமாயின் அதற்கடுத்த அலுவலக வேலை நாளில் மேற்குறிப்பிட்ட அதே நேரத்தில் சங்கராபுரம்பேரூரட்சியில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.

..2...

**6.** ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்போது முதலில் “Technical Bid“ என்று குறிப்பிடப்பட்டுள்ள உறை **22.04.2022** அன்று திறக்கப்பட்டு அதில் முன்வைப்பு தொகைக்கான கேட்பு வரைவோலை, GST தீர்வை சான்று, பணியில் முன் அனுபவம், முன்வைப்புத் தொகைக்கு விலக்களிக்கப்பட்டிருப்பின் அதற்கான சான்று மற்றும் இதர தகுதிகளுக்கான ஆவணங்கள் சரிபார்க்கப்படும். பின்னர் Technical Bid Evaluation ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு இருந்தால் மட்டுமே “ Price Bid” என்று குறிப்பிடப்பட்டுள்ள உறை திறக்கப்படும்.

7. ஒப்பந்ததாரர்கள் முன் வைப்புத் தொகையாக (EMD) மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு ஒப்பந்த மதிப்பு தொகையில் 1% தொகைக்கு ஏதேனும் ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் **``Executive Officer, Vadakkanandal Town Panchayat payable at Vadakkanandal ``** என்ற முகவரிக்கு வங்கி பணவிடை அல்லது வங்கி கேட்பு வரை வோலையினை இணைத்து ஒப்பந்தப்புள்ளி அளிக்க வேண்டும். அவ்வாறு இல்லாத முன் வைப்பு தொகை ( EMD ) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

8. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படாதபட்சத்தில் ஒப்பந்ததாரர்களின் முன் வைப்புத் தொகை ( EMD ) ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்வதற்கான காலம் முடிவடைந்த 28 நாட்களுக்குள் திரும்ப அளிக்கப்படும்.

9. ஒப்பந்ததாரர்கள் குறைந்தபட்சம் இரண்டாம் நிலை (Class II ) ஒப்பந்ததாரர்களாக மாநில அரசின் எந்த துறையிலோ, வாரியத்திலோ அல்லது அரசு சார்ந்த நிறுவனங்களிலோ பதிவு செய்யப்பட்டு நடைமுறையில் இருக்க வேண்டும். அதற்கான ஆவணங்களை இணைக்க வேண்டும்.

10. ஒப்பந்ததாரர்கள் கட்டுமான பொறியியல் துறையில் குறைந்த பட்சம் கடந்த ஐந்தாண்டுகள் (2017–2018 முதல் 2021–2022 வரை ) அனுபவம் இருக்க வேண்டும். மேலும் கடந்த ஐந்தாண்டுகளுக்கு தணிக்கை செய்யப்பட்ட (ஐந்தொகை தாள்) Balance sheet யை ஒப்பந்தபுள்ளியுடன் இணைக்க வேண்டும்.

11. ஒப்பந்ததாரர்கள் கடந்த மூன்றாண்டுகளில் ( 2019-2020 to 2021-2022) ஏதாவது ஒரு ஆண்டில் மாநில அரசின் எந்த துறையிலோ, வாரியத்திலோ அல்லது அரசு சார்ந்த நிறுவனங்களிலோ ஒரு ஒப்பந்தத்தில் ( Single agreement ) தற்போது அளிக்கும் ஒப்பந்த மதிப்பில் 50 சதவிகிதத்திற்கு குறைவில்லாமல் கட்டிடங்கள், தார் சாலை அல்லது சிமெண்ட் சாலை பணிகளில் திருப்திகரமாக பணிகளை முடித்திருக்க வேண்டும். அதற்கான ஆவணங்களை இணைக்க வேண்டும்.

12. ஒப்பந்ததாரர்கள் பணிகள் செய்வதற்கு போதுமான நிதியிருப்பு உள்ளது என்பதற்காக ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் தற்போது அளிக்க இருக்கும் ஒப்பந்த மதிப்பில் 15 சதவிகிதத்திற்கு குறைவில்லாமல் நிதியிருப்பு உள்ளதிற்கு போதுமான வங்கி ஆவணங்களை ஒப்பந்தபுள்ளியுடன் இணைக்க வேண்டும்.

13. ஒப்பந்ததாரர்களால் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் அரசு சான்றுரைஞ்சரால் ( Notary Public ) சான்றொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.

14. வணிக வரித் துறையில் அன்மையில் TIN தாக்கல் செய்யப்பட்டதற்கு தகுந்த ஆதாரம் இணைக்கப்பட வேண்டும்.

15. 2021–2022ம் ஆண்டு திட்ட ஒப்பந்த ஆவண புத்தகத்தில் பிரிவு 2ல் ஒப்பந்ததாரரால் அளிக்கப்பட வேண்டிய தகுதிகள் குறித்து இணைப்பு A முதல் H வரையிலான படிவங்கள் நிரப்பப்பட்டு இணைக்கப்பட வேண்டும்.

16. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் ஒவ்வொரு பக்கங்களிலும் ஒப்பமிட வேண்டும். ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பமிட யாருக்காவது அங்கீகாரம் அளித்திருந்தாலோ அல்லது பங்குதாரருக்கு பொறுப்பு நியமனம் செய்யப்பட்டிருந்தாலோ அதற்கான அதிகாரபூர்வமான ஆவணங்கள் அளிக்கப்பட வேண்டும்.

...3

**17.** ஒப்பந்ததாரர்கள் தங்களுக்கு சொந்தமாகவோ அல்லது குத்தகை அடிப்படையிலோ கீழ்கண்ட கட்டுமான தளவாடப் பொருட்களை வைத்திருக்க வேண்டும்.

| | **தார்சாலைகள் அமைத்தல்** | |
|---|---|---|
| 1 | சென்ட்ரல் மிக்சிங் ப்ளான்ட் | 1 |
| 2 | பேவர் மெஷின் | 1 |
| 3 | டிப்பர் லாரி | 4 |
| 4 | வைப்ரேட்டரி ரோலர் | 1 |
| 5 | ஸ்டேடிக் ரோலர் | 1 |
| 6 | வைக்கில் மவுண்டட் மெக்கானிக்கல் ஸ்பேரேயர் | 1 |
| 7 | தண்ணீர் லாரி | 2 |
| | **எம்பேங்க்மென்ட்** | |
| 1 | செயின் டோசர் | 1 |
| 2 | எக்ஸ்சாவேட்டர் | 1 |
| 3 | லோடர் | 1 |
| 4 | தண்ணீர் லாரி | 1 |
| 5 | ரோலர் 8–10 டன் | 1 |

அ) பேவர் மெஷினை ஒப்பந்த காலத்தின் போது எந்நேரத்திலும் பயன்படுத்தும் வகையில் சொந்தமாகவோ அல்லது குத்தகையின் அடிப்படையில் சட்டப்படியான உரிமைதாரராகவோ இருக்க வேண்டும். சொந்தமான பேவர் மெஷினாக இருந்தால் அதனுடைய பதிவு புத்தகத்தின் நகலில் அரசு வழக்கறிஞரால் சான்றொப்பம் பெற்று அளிக்கப்பட வேண்டும். குத்தகை அடிப்படையில் வைத்திருந்தால் அதனுடைய பதிவு புத்தகத்தின் நகலில் அரசு சான்றுரைஞ்சரால் ( Notary Public ) சான்றொப்பம் பெற்று அளிக்கப்பட வேண்டும். மேலும் ரூ.20/–க்கான முத்திரை தாளில் இரண்டு தனித்தனி சாட்சிகளுடன் குத்தகைதாரரருடன் செய்து கொண்ட ஒப்பந்த பத்திரத்தில் அரசு சான்றுரைஞ்சரால் ( Notary Public ) சான்றொப்பம் பெற்று அளிக்கப்பட வேண்டும்.

ஆ) ஒப்பந்ததாரர் ஹாட் மிக்ஸ் ப்ளான்ட் உரிமைதாரர் என்பதற்கோ அல்லது ஒப்பந்தத்திற்கு தேவையான ஹாட் மிக்ஸ்சினை வழங்குவதற்கு செய்து கொண்ட வழிவகைகளின்படி அந்நிறுவனத்தின் ஹாட் மிக்ஸ் இயக்குபவரிடமிருந்து கடிதம் பெற்று அளிக்கப்பட வேண்டும்.

இ) ஒப்பந்ததாரரிடம் இருக்கும் கட்டுமான கருவிகள் மற்றும் தளவாட பொருட்கள் எப்போது தயார்செய்யப்பட்டது, வாங்கப்பட்ட வருடம், கொள்ளளவு மற்றும் தற்போது பணி செய்யும் திறன் ஆகிய குறித்து உறுதி மொழி பத்திரம் மற்றும் சார்ட்ட் அக்கவுன்டன்டிடம் சான்று பெற்று இணைக்க வேண்டும். கட்டுமான கருவிகள் மற்றும் தளவாட பொருட்கள் குத்தகை அடிப்படையில் எடுக்க வேண்டியிருந்தாலோ அல்லது ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்தாலோ எந்த ஆதாரத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ளது அல்லது எடுக்கப்பட உள்ளது என்பதற்கான ஆதாரம் அளிக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்டவாறு ஆதாரங்கள் அளிக்கப்படாவிட்டால் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

**18.** ஒப்பந்ததாரர்கள் மேற்குறிப்பிட்ட அனைத்து நிபந்தனைகளின்படி தகுதியுடையவராக இருப்பினும் தவறான ஆவணங்கள் அளிக்கப்பட்டிருந்தது, எடுத்த பணிகளை செய்யாமல் இருந்தது அல்லது தரமாக முடிக்கப்படாமல் இருந்தது அல்லது மிகவும் காலதாமதமாக முடித்திருந்தது, நீதிமன்ற சிக்கல் அல்லது நிதியிழப்பு ஏற்படுத்தியிருந்தது போன்ற நிகழ்வுகள் கண்டறியப்பட்டால் அவர்கள் தகுதியிழக்க செய்யப்படுவார்கள்.

**19.** செயல் அலுவலரால் **18.04.2022 அன்று காலை 11.00 மணிக்கு**, வடக்கனந்தல் பேரூராட்சி அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் அளிப்பது குறித்து ஒப்பந்ததாரர்களுடன் கூட்டம் நடத்தப்படும். ஒப்பந்ததாரர்களுக்கு தேவைப்படும் தெளிவுரைகளை மேற்படி கூட்டத்தின்போது கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**20.** பொதுவாக தகுதிகளின் அடிப்படையில் குறைந்த விலை குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும். அப்போது ஒப்பந்ததாரர் ஏற்கனவே செலுத்தியுள்ள 1% முன் வைப்புத் தொகையுடன் ( EMD ) மேலும் கூடுதலாக ஒப்பந்த மதிப்பில் 1% தொகையினை பாதுகாப்பு வைப்புத் தொகையாக ( Security Deposit ) செலுத்த வேண்டும்.

..4..

21. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கப்படாதவரையில் சட்ட வகைகளுக்குட்பட்டு, எந்தநேரத்திலும் எந்தவொரு ஒப்பந்தப்புள்ளியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ மற்றும் ஒப்பந்த நடைமுறைகளை ரத்து செய்யவோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்கவோ பேரூராட்சி மன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

22. பணிகளை 180 நாட்களுக்குள் முடிக்க வேண்டும். அவ்வாறு ஆறு மாதங்கள் முடிந்து 45 நாட்கள் கடந்துள்ள நிலையிலும் பணிகள் முடிக்கப்படாதபட்சத்தில் ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

23. ஒவ்வொரு மாதமும் செய்யப்பட்டுள்ள பணிகளை பொறுத்து பட்டியல் தொகை வழங்கப்படும்.

24. ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் ஒவ்வொரு பட்டியலில் இருந்தும் 5% பிணை வைப்புத் தொகையாக ( Retention ) பிடித்தம் செய்யப்படும். இத்திட்ட சாலைப் பணி முடிக்கப்பட்டவுடன் மூன்றாண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு சாலை பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரே தனது சொந்த செலவில் சீரமைத்து கொடுக்க வேண்டும். மேற்படி காலத்தில் பணிகளில் குறைபாடுகள் ஏதுமில்லாதபட்சத்தில் அத்தொகை செயல் அலுவலரால் விடுவிக்கப்படும்.

25. கட்டிட தொழிலாளர் நலநிதியாக மதிப்பீட்டுத் தொகையில் 1% தொகையினை பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் .

26. ஒவ்வொரு பட்டியல்களிலும் அரசு விதிமுறைகளின்படி வருமானவரி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (GST ) தொகை பிடித்தம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளில் செலுத்தப்படும்.

27. https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாகவும் ஒப்பந்தப்புள்ளிகளை மேற்குறிப்பிட்ட நிபந்தணைகளுக்குட்பட்டு அளிக்கலாம்.

28. 2021–2022ம் ஆண்டு திட்ட ஒப்பந்த ஆவண புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள இதர ஒப்பந்த நிபந்தனைகளையும் பார்த்து அறிந்து கொள்ள ஒப்பந்ததாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

29. ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த நிபந்தனைகளுக்குப்பட்டும், இத்திட்டப்பணி முடிக்கப்பட்டவுடன் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு இப்பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை ஒப்பந்ததாரரே தனது சொந்த செலவில் சீரமைக்கும் வகையில் ரூ.20/–க்கான முத்திரை தாளில் செயல் அலுவலருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

30. ஒப்பந்தப்புள்ளிகள் அளிப்பது குறித்து வேறு ஏதேனும் தெளிவுரைகள் வேண்டுமாயின் சங்கராபுரம் பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

31. இவ்வேலைகள் தொடர்பாக அரசாணைகள், நடைமுறை விதிகள், திட்ட விதிமுறைகள் மற்றும் பேரூராட்சிகள் ஆணையகத்தின் மூலம் தெரிவித்த அறிவுரையின்படி வேலைகளை மேற்கொள்ள வேண்டும்.

**32. ஒப்பந்ததாரரின் சொந்த செலவிலேயே பணி நடைபெறும் இடத்தில் பணி குறித்த விவரங்கள் அடங்கிய தரமான பலகைகள் 4 அடி X 2½ அடி (1.20m X 0.75m) வைக்கப்பட்டு அதனை புகைப்படம் எடுத்து இவ்வலுவலகத்தில் சமர்பிக்கப்பட வேண்டும்.**

33. ஒப்பந்ததாரர் பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்கள் அனைத்தையும் அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் ஆய்வு செய்து அதன் ஆய்வு அறிக்கையினை இவ்வலுவலகத்தில் சமர்பிக்கப்பட வேண்டும். பணிகள் மேற்கொள்ளும் போது ஒவ்வொரு நிலைகளிலும் பணியின் தரம் அரசு தொழில் நுட்ப கல்லூரியில் ஆய்வு செய்து ஆய்வறிக்கையினை இவ்வலுவலகத்தில் சமர்பிக்கப்பட வேண்டும்.

34. ஒப்பந்ததாரர் பணிகள் மேற்கொள்ள இருக்கும் இடத்தினை பணி ஆரம்பிப்பதற்கு முன்னரும், பணி நடைபெறும் போதும் மற்றும் பணி முடித்த பின்னரும் (Digital) புகைப்படம் எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்கப்படும் மூன்று நிலையிலுள்ள புகைப்படங்கள் ஒரே இடத்தினை (Same Location) காட்டும்படியாக இருக்க வேண்டும்.

**35.** Engineering Manual படி பணிக்கான ஒப்பந்த காலத்திற்குள் பணியினை ஒப்பந்ததாரர் மந்தமான முறையில் மிக மெதுவாக பணியில் முன்னேற்றம் காண்பிக்கும் பட்சத்தில் (Penalty for slow Progress) அபராதம் ஒப்பந்த மதிப்பில் 5% விதித்து பட்டியல் தொகையில் ஈடு செய்யப்படும்.

**36.** இறுதி பட்டியல் பணி முடிவறிக்கை (Completion Report) தொழில் நுட்ப அனுமதி வழங்கும் பொறியியல் பிரிவு அலுவலரிடம் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே இறுதி பட்டியல் தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும்.

**<u>இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி அளிப்பதற்கான நடைமுறைகள்</u>**

1. ஒப்பந்ததாரர்கள் இணையதளத்தின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி அளிப்பதற்கு டிஜிட்டல் சிக்னேச்சர் பதிவு ( Digital Signature Certificate ) செய்து ஈ–டோக்கன் (e-token) பெற்றிருக்க வேண்டும். SIFY/TCS/nCode/SCS/SGs போன்ற நிறுவனங்கள் Digital Signature Certificate யை பெற்று தருவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
2. https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலம் ஒப்பந்ததாரர்கள் தங்கள் அடையாளம் user id and passward யை பயன்படுத்தி ஒப்பந்தப்புள்ளிகளை அளிக்கலாம்.
3. ஒப்பந்ததாரர்கள் மேற்கண்ட இணையதளத்தில் இருந்து ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை நகல் எடுத்து அதனை நன்றாக படித்துப் பார்த்து ஒப்பந்தப்புள்ளி அளிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். தவறாக அளிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.
4. ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளியுடன் அளிக்கப்பட வேண்டிய ஆவணங்களை ஸ்கேன் செய்து இணைக்கப்பட வேண்டும்.
5. முன் வைப்புத் தொகை (EMD) செலுத்தப்பட்டதற்கான அசல் வங்கி கேட்பு வரைவோலையினை ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பதற்கு முன்பாக பேரூராட்சியில் ஒப்படைக்கப்பட வேண்டும்.
6. இணையதளத்தின் மூலமாக அளிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப காரணமாக ஏற்படும் எந்த வகையான காலதாமதத்திற்கும் செயல் அலுவலர், சுங்கராபுரம் பேரூராட்சி பொறுப்பாகமாட்டார்.
7. இணையதளத்தின் மூலமாக அளிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் **22.04.2022** அன்று **3.00** மணிக்குள் (சர்வர் நேரத்தின்படி **15.00**) ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலருக்கு அனுப்பப்பட வேண்டும்.
8. ஒப்பந்தப்புள்ளிகள் **22.04.202** அன்று பிற்பகல் 3.30 (சர்வர் நேரத்தின்படி 15.30) மணிக்கு சங்கராபுரம் பேரூராட்சி அலுவலகத்தில் வருகைதந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் சங்கராபுரம் பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அலுவலராலோ திறக்கப்படும்.

**செயல் அலுவலர்,**
**வடக்கனந்தல் தேர்வு நிலை பேரூராட்சி,**
**கள்ளக்குறிச்சி மாவட்டம்.**

**பெறுநர்**

பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், வடக்கனந்தல் தேர்வு நிலை பேரூராட்சி.

**நகல் :** 1. மாவட்ட ஆட்சித் தலைவர், கள்ளக்குறிச்சிஅவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் மண்டலம், கடலூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், கடலூர் மண்டலம், கடலூர்.
4. துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம்.
5. இளநிலைப் பொறியாளர், சின்னசேலம் பேரூராட்சி.
6. செயல் அலுவலர், சின்னசேலம், தியாகதுருகம் மற்றும் சங்கராபுரம் பேரூராட்சிகள்.
7. கிராம நிர்வாக அலுவலர், வடக்கனந்தல் கச்சிராயபாளையம் விளம்பரம் செய்ய தகவலுக்காக.
8. அலுவலக விளம்பர பலகைக்கு.